**செயற்குழுக் கூட்டம் (26 -08-2023)**

இன்று (26 ஆகஸ்ட் 2023) நமது இயக்கப் பொதுச் செயலாளர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நமது தலைமையகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில், ஆறு செயற்குழு உறுப்பினர்களும், நான்கு உறுப்பினர்கள் பார்வையாளர்களாகவும் கலந்து கொண்டனர். நமது சட்ட ஆலோசகரும் கலந்து கொண்டார். இன்று நடை பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இயக்கத்தின் 2023ம்ஆண்டு ஜூலை மாத வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டது. வரவு செலவு கணக்கு சரிதானன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. 30-07-2023 அன்று திருச்சியில் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டட்து. போக்குவரத்து துறையில் ஊழல் செய்த அமைச்சர் செந்தில் பாலாஜியின் குற்ற வழக்கை தொடர்ந்து கண்காணித்து உரிய சட்ட நடவடிக்கை எடுத்து, ஊழல் செய்து பணி நியமனம் பெற்றவர்களை நீக்கி , தகுதியானவர்களுக்கு பணி உத்தரவு கிடைக்கும் வரை தொடர்ந்து சட்ட போராட்டம் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்படுகிறது.

3, தற்பொழுது சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு ஆனந்த் வெங்கடேஷ் அவர்கள் அரசியல் தலைவர்கள் மீதான குற்ற வழக்குகள், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியின் நிர்வாக உத்தரவினால் விழுப்புரத்தில் இருந்து வேலூர் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டு ரத்து செய்யப்பட்டதை திரும்ப விசாரிக்க உத்தரவு பிறப்பித்துள்ளார். இது குறித்து விவாதித்த உறுப்பினர்கள், நீதிபதிகள் தலையிட்டு அரசியல் தலைவர்களை காப்பாற்றுவது குறித்து அதிர்ச்சி அடைந்தனர். எனவே சம்பந்தப்பட்ட தலைமை நீதிபதி மற்றும் சம்பந்தப்பட்ட நீதிபதிகள் மீது உரிய புகார் அளித்து அவர்களுக்கும் உரிய தண்டனை பெற்று தரும் வரை, உரிய சட்ட நடவடிக்கை எடுத்து நீதித்துறையின் மாண்பைக் காப்பதென தீர்மானிக்கப்படுகிறது. மேலும், இந்தக் குற்ற வழக்குகளில் இயக்கம் தம்மை இணைத்துக்கொண்டு, குற்ற வழக்குகள் இறுதி முடிவாகும் வரை எல்லா நிலைகளிலும் (உச்ச நீதி மன்ற வரையிலும் கூட) தொடர்ந்து செயல்பட்டு குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை பெற்றுத்தர தொடர்ந்து நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்படுகிறது.

4. இயக்கத்திற்கு இளைஞர்களை உறுப்பினர்களாக்க உரிய நடவடிக்கை எடுப்பது என தீர்மானிக்கப்படுகிறது. இயக்க உறுப்பினர்களான, திரு.காசிநாதன் மற்றும் திரு. அரங்க ராஜன் அவர்களும் தாமாக முன்வந்து, செங்கல்பட்டு மாவட்டத்தில் இயக்கியத்திற்கான கிளை மற்றும் மாவட்ட கிளைகளை ஏற்படுத்த தாங்கள் முயல்வதாகவும் எனவே தங்களுக்கு செயற்குழு அதிகாரம் அளிப்பின், தேவையான உறுப்பினர்களை சேர்த்து செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரு மாவட்டம் மற்றும் கிளைகளையும் அமைக்க முடியும் என்று தெரிவித்தனர். அவர்களது கோரிக்கையை ஏற்று, அவர்கள் இருவரையும் உரிய உறுப்பினர்களை சேர்த்து, செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரு மாவட்டம் மற்றும் கிளைகளையும் அமைக்க ஆவண செய்ய உரிய அதிகாரம் அளிக்கப்படுகிறது. இதற்காக பொதுச்செயலாளர் அவர்கள் அவர்கள் இருவரையும் இப்பணிக்காக நியமித்து உரிய கடிதம் வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். தஞ்சாவுர் மாவட்டத்தையும் மாவட்டத் தகுதிக்கு உயர்த்தவும் இவர்கள் பணி தொடர வேண்டும்.

5.. நீதிமன்ற வாய்தா கேட்கும் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டி ஒரு வடிவு மனுவைத் தயாரிக்கும் நமது செயலாளர் (சட்டம்) திரு A நஃபீஸ் அஹமத் அவர்களை விரைவில் தயாரிக்குமாறு இந்த செயற்குழு கேட்டுக்கொள்கிறது. அதே போன்று கரூர் மவட்ட நெடுஞ்சாலைத் துறை ஊழல்,, தார்விலை வீழ்ச்சியில் ஊழல், மாவட்டக்கல்வி அதிகாரி மீதான ஊழல் புகார் ஆகியவை பற்றி யும் விவாதிக்கப்பட்டது

6. நமது இயக்கத்தின் உறுப்பினராக கீழ்க்கண்ட 14 பேர் புதிதாக விண்ணப்பித்துள்ளனர்.

<u>ஆயுள் உறுப்பினர்கள்</u>

1. **திரு S. தட்சிணா மூர்த்தி**
2. **திரு K. சுப்ரமணியன்**

<u>ஆண்டு உறுப்பினர்கள்</u>

**1 திரு P கிருஷ்ணன்**
**2 திருமதி K வை ஜெயந்தி**
**3. திரு R.பழனிவேல்**
**4. திரு இரா முத்து**
**5. திரு ந. குணசேகரன்**

**6. திருமதி இரா. மணிமேகலை**
**7. திரு ரே. பாஸ்கர்**
**8. திருமதி ம. ஆர்த்தி**
**9. திரு இரா. ஹரிஹரன்**
**10.திரு P. செல்வராஜ்**
**11 திருமதி D. அமுதா**

**<u>மாணவ உறுப்பினர்</u>**
**செல்வி S ஜனனி**

எல்லா விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆண்டு உறுப்பினராகிறார்கள்.

7. அயனாவரத்திலுள்ள நமது இயக்கத்தின் பாரத ஸ்டேட் வங்கியில் **(SBI)** பணப்பரிமாற்றம் அதிகமாக நடைபெறுவதில்லை. எனவே அங்குள்ள சேமிப்புக்கணக்கை முடித்துவிடக் கோரிக்கை விடப்பட்டுள்ளது . நமது இயக்கத்தின் இண்டியன் ஓவர் சீஸ் வங்கியின் **(IOB)** சேமிப்பு வங்கி மட்டும் தொடந்து செயல் படுமாறு முடிவு எடுக்கப்பட்டது.

8. இறுதியில் பொது செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிதே முடிவுற்றது.

ஒப்பம்

**வே கார்த்திகை ராஜன்**
**பொது செயலாளர்**